உ

கடவுள்துணை.

—(*)—

அகத்தியமுனிவர்

அருளிச்செய்த

வயித்தியக்கும்மி.

இஃது,

சிதம்பரம்.

கருணாநந்தசுவாமிகளால்

பரிசோதித்துச்

சிந்தாத்திரிப்பேட்டை.

நாராயணசாமிமுதலியார்

அண்டுசன்அவர்களால்

தமது.

பிரபாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

—(*)—

௧௮௮௫௵-அக்டோபர்௴.

சிவமயம்.

அகத்தியர்

திருவாய்மலர்ந்தருளிய

வயித்தியக்கும்மி.

கும்மியடிபெண்கள் கும்மியடி-குரு
பாதங்காணவேகும்மியடி
நம்மையாளும்விநாயகன்பாதத்தை
நாடிக்கும்மியடியுங்கடி
மானேகும்மியடியுங்கடிமட
மானேகும்மியடியுங்கடி
தேனேகும்மியடியுங்கடி இந்த
தேசஞ்செழிக்கவேகும்மியடி
அச்சுநடையாம்பெருச்சாளி ஐயன்
அதன்மேல்மகிழ்ந்துஎழுந்தருளி
உச்சிதமாய்வரும்விநாயகன்பாதத்தை
உவந்துகும்மியடியுங்கடி
குறுமுனிநாதர்அகத்தியர்சொன்ன
கோதில்வயித்தியக்கும்மிசொல்ல
சொர்ணமயில்தனிமேலேறிவருஞ்சிவ
சுப்பிரமண்யன்பதங்காப்பாமே

சுரம்.

சுக்குமிளகு சிறுதேக்குபுடல்
 தூதுவேளை சித்ரமூலமுடன்
ஒக்கநறுக்கிக்கியாழமிடச்சுரம்
 ஓடுமென்றேயடியுங்கடி (க)
பேராமுட்டி சிறுதேக்குமூலம்
 பேருளதிப்பிலிமிளகு
வீரமாகிக்கியாழமிடச்சுரம்
 விட்டுப்போமென்றடியுங்கடி (உ)
சிந்தில்விலாமிச்சுபற்பாடகங்கோரை
 சிறுதேக்குசந்தனமிருவேலி
காந்திகிண்டிகியாழமிடச்சுரங்
 கதறிப்போமென்றடியுங்கடி (௩)

குன்மம்

ஓமம்பஞ்சலவணமுள்ளியதற்
 குரியநாயுருவிகடுக்காய்
யாமநிம்பச்சாற்றரைத்துப்புடமிடச்
 சாகுங்குன்மமென்றடியுங்கடி (௪)

மாந்தம்

ஓமமஞ்சவனமுள்ளியுடன்
 ஒக்கநறுக்கியேநாயுருவி

காயமானபழத்தைத்துக்குடித்திட்
கரக்குமாந்தமென்றடியுங்கடி (௫)

வாதம்.

மஞ்சள்வசம்புவெள்ளுள்ளிகடுகு
வளருந்தான்றிசதுரக்கள்ளி
செஞ்சாற்றில்வாதம்போமென்றேநிதம்
செப்பிக்கும்மியடியுங்கடி (௬)

பித்தம்.

சீரகம்சுக்குபேய்பீர்க்கு
சீந்தில்பற்பாடகம்கொத்தமல்லி
சேரநீரில்விட்டுக்காய்ச்சியுண்ணப்பித்தஞ்
சேராதென்றேயடியுங்கடி (௭)

மேகம்-பாண்டு-சூலை கிரந்தி-குஷ்டம்.

பறங்கிப்பட்டையருந்திடவேமேகம்
பாண்டுசூலைகிரந்திகுட்டம்
திறங்கிப்போனமனிதரியாவருந்
திறமாமென்றேயடியுங்கடி (௮)

மூலம்.

காட்டுக்கரணைகறிக்கரணைநல்ல
காராக்கரணைபுளிக்கரணை

ஆட்டுமோரிற்கலந்துண்ணமூல
மற்றுப்போமென்றடியுங்கடி (௯)

பித்தம்.

ஆற்றுமணலைத்தான்வறுத்து அதின்
மேலேமுசுக்கையின்சாறுவிட்டுப்
பார்த்துப்பதமாய்க்காச்சியுண்ணப்பித்தம்
பறந்துபோமென்றடியுங்கடி (௰)

விக்கம்.

சங்கம்வேருடன்பச்சரிசிமோரில்
தானிடித்துக்கூழாய்க்குடிக்கப்
பொங்கிவருமந்தவிக்கங்களானாலும்
போகுமென்றேகும்மியடியுங்கடி. (௰௧)

நீர்க்கட்டு.

பூனைநெருஞ்சில்சிறுகிளைவெள்ளரி
போதநீர்காச்சியுழக்காக்கி
வேளையறிந்துவெண்காரமிட்டுண்ணநீர்
விட்டுவிடுமென்றடியுங்கடி (௰௨)

நீரிழிவு

ஆவாரந்தாளுங்கல்மதமும்நல்ல
அழகுகொன்றைப்பட்டையுடன்மிளகு
வாகாய்ச்சிக்குடித்திடயிழிவு
வாங்குமென்றேயடியுங்கடி (௰௩)

மேகசுரம்.

பனைவெல்லம்சுக்குமிலக்குமிழம்வேர்
பதமாய்க்காச்சிக்குடித்திடவே
அனந்தநாள்களாய்வந்தமேகசுரம்
அகன்றுபோமென்றடியுங்கடி (௰௪)

தாதுவிர்த்தி

கற்கண்டுபேரீச்சம்பழமுமொன்றாய்க்
கலந்துதேனிலரைத்துண்ணவே
மற்கட்டுகெட்டவேவீரியவிர்த்தி
வளருமென்றேயடியுங்கடி (௰௫)

மேகம்.

வன்னியிலையைத்தான்பறித்து
வலுமையெருமைத்தயிரிலுண்ண
பன்னிவருமந்தமேகங்களெல்லாம்
பறந்துபோமென்றடியுங்கடி (௰௬)
தேங்காய்ப்பாலுஞ்சிறுகுறிஞ்சான்வேர்
தினமுமூன்றுநாள்குடிக்க
வாங்காமேகங்களிருபத்தொன்றும்
வாங்கிப்போமென்றடியுங்கடி (௰௭)
பறங்கிப்பட்டையைத்தூளாக்கியாவின்
பாலுடன்ரண்டுகாசிடைபோட்டு

இருகக்காய்ச்சிக்குடித்திடவேமேக
மேகுமென்றேயடியுங்கடி (௰அ)

சன்னி

முருங்கைமாவிலிங்கையுடனொச்சி
முதிரும்பசுபத்ரியீச்சுரவேர்
சிரங்காய்காய்ச்சிக்குடித்திடவேசன்னி
சிதறிப்போமென்றடியுங்கடி (௰௯)

சுரம்.

ஆவின்மோரிற்புளியாரணையதை
யவித்துப்பறித்துப்பொடியாக்கி
தாவித்தேனிலருந்திடவேசுரந்
தரியாதென்றேயடியுங்கடி (௨௰)

கண்வலி.

தென்னங்காயைத்திருகிவிட்டு
சிறுபயிற்றைப்பருப்பாக்கி
தின்னக்கண்வலிதீருமென்றுசொல்லி
சித்திரப்பெண்காளடியுங்கடி (௨௧)

பக்கவாதம்

சுக்கொன்றுமூக்காவேளிரண்டுமாகச்
சுகமாய்காய்ச்சிக்குடித்திடவே
பக்கவாய்வுகுண்மங்களெல்லாம்
பறக்குமென்றேயடியுங்கடி (௨௨)

(இருமல்-சுவாசம்)

பன்னுநாதுவேளைசங்குயியனுடன்
பண்பாய்க்காய்ச்சிக்குடித்திடவே
பகருமிருமல்சுவாசகாசமும்
பறக்குமென்றேயடியுங்கடி. (உக)

(காசம்)

ஆவின்வெண்ணெயில்பூனைக்காலிவிலை
அரைத்தடுப்பிற்றன்கிளறி
பாவனையாகஅருந்திடவேகாசம்
பறக்குமென்றேயடியுங்கடி (உ௪)

(மேகம்)

கருங்குங்கிலியங்கருஞ்சீரகங்காட்
டெருமைச்சாணியிருள்ளிச்சாற்றில்
பொருந்தவரைத்துக்குடித்திடவேமேகம்
போகுமென்றேயடியுங்கடி (உ௫)

(இருமல்க்ஷயம்)

இஞ்சிவெள்ளைகருக்கம்பூமிளகு
இயல்பாய்க்ச்சிக்குடித்திடாவே

பஞ்சையிருமல்காசங்களெல்லாம்
பறக்குமென்றேயடியுங்கடி (உசு)

(வீரியவிர்த்தி)

வெண்காரம்லிங்கம்பின்னுஞ்சாதிக்காய்
வேருடனேயெட்டிவிரைமுள்ளி
அக்கிராகாரமூலந்தேனிலரைத்துண்ண
ஆளும்வீரியமென்றடியுங்கடி (உஎ)

பித்தம்.

நெற்பொரியேலந்திப்பிலிசீரகம்
நெய்யுடன்கூடிபருத்திவிரை
சற்கரைதேனில்கலந்துண்ணவேபித்தந்
தரியாதென்றேயடியுங்கடி (உஅ)

(குன்மம்)

பொன்முசுட்டையிசுரவேர்மூலம்
போத்துறைப்பாளையிந்துப்பு
தின்னுங்கல்லுப்புநார்த்தங்காயதில்
சேர்த்தடையென்றடியுங்கடி
அடைத்தமருந்தைப்பூமிபுடம்வைத்தே
அந்திசந்திமண்டலந்தின்ன

புடைத்தவலியுங்குன்மமெல்லாமப்போ
போகுமென்றேகும்மியடியுங்கடி (௩௰)

(விக்கல்)

சடாமஞ்சிலெலுமிச்சம்ரசத்திலரைத்து
சதுராய்த்தேனில்மத்தித்தளிக்க
சாடும்விக்கல்களையென்றேதினஞ்
சார்ந்துக்கும்மியடியுங்கடி (௩௧)

(வாதபித்தம்)

கருப்பஞ்சாற்றில் துருசுசுத்திசெய்து
கதித்தபொடிதலையக்கவசம்
விருப்பாய்ச்செய்துகுக்கிடமிடவே
மேவுபற்பமென்றேகும்மியடி (௩௨)

பித்தம்நாற்பத்திரண்டாகும்பிற
மேகமிருபத்தொன்றாகும்
எத்துவாதமெண்பத்துநாலென்றே
ஏத்திக்கும்மியடியுங்கடி (௩௩)

மூலமாறுவிதமாகும்பின்னு
முடிக்குக்குன்மங்களெட்டாகுஞ்
சூலையாறுவிதமாமென்றே
சுகமாய்க்கும்மியடியுங்கடி (௩௪)

சன்னிபதின்மூன்றுதானாகும் அதில்
சனித்ததோஷங்கள்ஏழாகும்
கன்னிக்கிராணிஆறாகுமென்று
கலந்துகும்மியடியுங்கடி (௩௫)
குட்டம்பதினெட்டுமூன்றாகும் அதில்
குன்மம்வியரமென்றேதெரிந்து
திட்டசுரம்அறுபத்துநாலென்றே
தேர்ந்துகும்மியடியுங்கடி (௩௬)

(வாந்தி.)

நெல்லிதிப்பிலிசீரகமும் அதில்
நேராகநெற்பொரிதான்கூட்டி
வல்லியமாகக்கியாழமிட்டுண்ண
வாந்திகள்போமென்றுகும்மியடி (௩௭)

(விக்கல்)

தோகைமயிலிறகின்சாம்பலுடன்
தேனுமொருதுளிதானும்விட்டு
வாகாய்நாக்கில்தடவிடவேவிக்கல்
வாங்கிப்போமென்றடியுங்கடி (௩௮)

(கிணக்கழிச்சல்.)

மாதளம்பிஞ்சுதென்னம்பிஞ்சுநல்ல
மாவிலைக்கொழுந்துடன்தானரைத்தே

ஆதுளைப்பிள்ளைக்கருத்தக்கழிச்ச
லகலுமென்றேகும்மியடியுங்கடி (௩௯)

(சோகை)

அரப்பொடிசிட்டம்பழச்சாற்றிலாட்டி
அரைப்புடமிட்டுத்தானெடுத்து
புரைப்படிசோகைக்குத்தான்கொடுத்திடப்
போமென்றேகும்மியடியுங்கடி (௪௰)

(பாண்டு)

கரசலாங்கண்ணிமிளகுடனேயதைக்
கடுக்காயளவாய்த்தானரைத்து
உரிசையாயுள்ளுக்குக்கொடுத்திடப்பாண்டு
ஓடுமென்றேகும்மியடியுங்கடி (௪௧)

(பற்கொப்பளித்தது)
வெள்வேலம்பட்டைகுமிழம்பட்டைநல்ல
மேலானஆவின்பட்டையுடன்
உள்ளிக்கியாழங்கொப்பளிக்கபல்லுக்
குறுதியென்றேகும்மியடியுங்கடி (௪௨)
(பிடிப்பு)
வாதமடக்கிநொச்சியிலையுடன்
மருவுபாவட்டைதான்கூட்டி

சாதகமாய்காய்ச்சிப்பிடிப்புக்குத்தான்விட
சருகுமென்றேகும்மியடியுங்கடி (௪௩)
இப்படியெட்டுநாளந்திசந்தியாக
யிதமாகநீரைத்தான்வார்க்க
சொற்படிகண்டகளுப்போலதுவண்
டோடுமென்றேகும்மியடியுங்கடி (௪௪)

(வீரியவிர்த்தி)

வெண்காரம்லிங்கம்அபினிசாதிக்காய்
வேருடன்மந்திஷ்டியக்கிராகாரம்
மங்காமல்தேனிலரைத்துண்ணவேவீர்யம்
வளருமென்றேகும்மியடியுங்கடி (௪௫)

(இரத்தகாசம்)

ஆல்விரையத்திநாவலரசு
முதிரும்நிலப்பனைமான்கொம்பு
பால்முருங்கைப்பூதூதளைப்பூவுடன்
பார்த்தரையென்றேகும்மியடி (௪௬)

பார்த்ததையந்திகாலேதேனெய்யினில்
பக்குவமாய்ப்பத்துநாட்கள்தின்ன
கோர்த்தெடுக்கின்றரத்தகாசங்கள்
குதித்துப்போமென்றேகும்மியடியுங்கடி (௪௭

கரப்பான்

ஏலஞ்சுக்குசீரகமூன்றையும்
ஏற்கநல்லெண்ணெயிற்பொடித்துஇட்டு
பாலசூரியன்முன்வைத்துப்பூசப்
பறக்குங்கரப்பனென்றடியுங்கடி (௪௮)

தட்வியிப்படிநாட்களொருமூன்று
தப்பாமற்சொன்னவிதஞ்செய்திடில்
அட்வீதிப்பட்டதுபோற்கரப்ப
னகன்றுபோமென்றடியுங்கடி

சிரங்கு

கருங்கம்பளியைச்சுட்டுக்கரியாக்கிக்
காளெள்ளெண்ணெயிற்றான்குழப்பி
ஒருபிள்ளைச்சிரங்குக்குமேற்றடவ
ஓடுமென்றேகும்மியடியுங்கடி (௫௰)

காசம்.

ஆவின்மோரிற்பரங்கிச்சக்கையதை
யவித்துவுலர்த்திப்பொடியாக்கி
பாவனையாகவேதேனிற்கொள்ளகாசம்
பறந்துபோமென்றடியுங்கடி (௫௧)

வயிற்றுவலி.

பருத்ததேங்காயைத்திருகிப்பிட்டுசெய்து
பற்பாடகத்தைப்பருப்பாக்கி
திருத்தமாகவேதின்றுவிருவேளை
தீருமென்றேகும்மியடியுங்கடி (௫௨)

(குன்மம்)

ஆவாரம்பூதிப்பிலிமிளகுசுக்குயேலம்
அதிமதுரஞ்சிறுதேக்குடனே
வால்மிளகோடெட்டுங் கியாழமிட்டாற்குன்மம்
வாங்குமென்றேகும்மியடியுங்கடி (௫௩)

(சுவாசம்.)

பத்தியமாகக்கருக்கோழிச்சாறு
பாங்காய்க்காய்ச்சிக்குடித்திடவே
சத்தியமாகவேமேல்சுவாசமெல்லாந்
தரியாதென்றேகும்மியடியுங்கடி (௫௪)

ஆராதாரந்தொல்லையடியதற்
கப்பாலேயொன்றுமில்லையடி
சீராகவேநின்றுன்னிப்பார்த்துப்பெண்கள்
சிறந்துகும்மியடியுங்கடி (௫௫)

வயித்தியகும்மி.

முற்றுப்பெற்றது.